உ

கணபதி துணை.

# திருச்செந்தூரகவல்.

சிற்றம்பலநாடிகள்

அருளிச்செய்தது.

இது

யாழ்ப்பாணத்து

வண்ணைநகர்ச்

## சுவாமிநாதபண்டிதரால்

தமது

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்:

சாதாரண௵ ஆடி௴.

இதன் விலை அணா

உ

கணபதி துணை.

# திருச்செந்தூர்ச்
# சுப்பிரமணியரகவல்

## காப்பு.

நந்தா ரலைவாயி னண்ணியுல கேத்தவொளிர்
செந்தூர்த் திருவகவல் செப்புவே—னிந்தூருஞ்
செஞ்சடையான் யானைச் சிரமுடையா னன்பிலக
ணெஞ்சடையான் பாத நினைந்து.

ஓமெனுந் தாரக வொண்பொருள் சிவனுக்
காமென மொழிந்தே யருட்குரு வானோன்
பொற்புறு பொதிய வெற்புறு முனிக்கு
நற்பொருள் விளக்கு ஞான தேசிகன்
பொய்வழிச் சமணப் புலையிரு ணீக்கிச்
சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தி
முருகன் குமரன் மூவிரு முகன்மான்
மருகன் சிவனருண் மைந்தன் கந்தன்
மலைமகள் பாலன் வயங்கிளர் வேலன்
கலைபயில் புலவன் கார்த்தி கேயன்
வளையொரு மருப்பு வாரண முகவற்
கிளையவன் குகன்மயி லேறும் பெருமான்
சூரசங் காரன் சுப்பிர மணியன்
வீரருள் வீரன் விரைகமழ் கடம்பன்

# திருச்செந்தூரகவல்.

சேந்தன் வள்ளி தெய்வ யானை
காந்தன் செவ்வேள் காங்கேயன் சிலம்ப
னாயிர நாமத் தையன் றுய்யன்
சேயருட் கோமான் சேவற் றுவசன்
வரங்கிளர் கருணைப் பரங்கிரி யுறைவோன்
மாவினம் விளங்கு மாவினன் குடியோ
னந்தா ரலைவாய்ச் செந்தூர்க் கடவுள்
பாரகம் விளக்கு மோரகத் தமர்வோன்
மாலய னிறைஞ்சுஞ் சோலைமா மலையோன்
குன்றுதோ றாட னன்றென மகிழ்ந்தோன்
பாசக் கங்குல் பசையறப் பருகி
நேசர்க் கின்ப நிறையொளி பரப்பித்
திருவளர் செழும்பொற் செந்தா மரைக்கு
மருவுமோர் சான்றாய் மலர்ந்தபொற் பதமு
நினைப்பொடு மறப்பு நீங்கிடு மதீத
மனைப்பர நாத மறையொலி யலம்பும்
பாந்தளஞ் சுடிகைப் பன்மணி யிழைத்த
காந்துசெஞ் சுடர்க்காற் கழற்பரி புரமுங்
கண்குளிர் கனகக் கவின்கிடந் திலங்குங்
கிண்கிணி யிசைக்குங் கிளர்திரு வரையும்
வட்டுடை வரிந்து தொட்டகூர் வாளுங்
கட்டுறு யோக பட்டிகைச் சிறப்பு
மிந்திர வில்விரண் டெதிர்பொருத் துவயோற்
சுந்தர வாழி சூட்டுமங் குலியு
மன்னிரு முகிலான் மணிதரு நிதிசேர்
பன்னிரு கமல பாணியு மவற்றிற்
சூலமும் வேலுந் துரோணமுஞ் சரமும்
பாலமுங் குலிசமும் பரிசையும் வாளு

# திருச்செந்தூரகவல்.

மாழியு மழுவு மபயமும் வரதமுஞ்
சூழுமுன் கைக டிலங்குபொற் கடகமு
மந்தரந் தழுவும் வாசுகி யன்ன
சந்தத மொய்ம்பு தழைத்தகே யூரமும்
பரிதிமண் டலம்போற் பதக்கமுத் தாரந்
தருசரப் பணிக டயங்குபூண் மார்பு
மட்டிகை பணிநல் லக்கிருங் குவளை
விட்டொளி விரிக்கும் வியன் கந்தரமு
மூவிரு திங்கண் முதிர்ந்தபூ ரணம்போன்
மேவுசண் முகங்கள் விளங்குநற் பொலிவு
முளரிமுந் நான்கு மூவிரு குமுதம்
வளர்மதி யுதயத் திடைவளர்ந் தன்போன்
முகந்தொறுங் கருணை யுகந்தகண் களுஞ்சீ
ருகந்தபொற் குதலை யொழுகுவாய் வனப்புந்
தொட்டபொற் குழைக கேக்குகுண் டலமுஞ்
சுட்டியு நுதலி விட்டவெண் ணீறு
மன்னிரு மகளிர் மாட்டலால் வணங்காச்
சென்னிசேர்ந் தொளிருஞ் சேகரச் சிறப்பு
மகபதி மகளும் வள்ளியந் திருவுஞ்
சுகமணஞ் சூட்டுந் தொங்கலுங் கடம்புங்
கோதைதரு ழன்றோர் கொங்கையாற் பூசு
மேதமில் சுகந்த லேபனப் பூச்சு
மரகதப் பொருப்பும் வயிரவான் பொருப்பு
நிரல்வல மிடமார் நெடியபொற் கிரிபோ
லகிலமு மீன்ற வன்னைய ரிருவர்
மகிழ்வுற விருபான் மன்னிவாழ்ந் திருப்பப்
பன்னிறந் தவிர்க்கும் பச்சைவான் கிரிமேற்
றன்னிரு கோடி சூரிய ருதித்தாங்

# திருச்செந்தூரகவல்.

கவரவ ரச்ச மடுதிறன் மயூரக்
குரகத மேறிக் குலவு காட்சியுங்
கரந்தெனை யாளுங் கருணையாற் புவிமேற்
சரந்தரு மானுடச் சட்டை சாத்தி
யழியா வொளிவந் தழியா மொழியை
வழியா மொழிய வந்தனங் குருவா
யாணவக் கடற்கு ளலைபடு துரும்பும்
பூணுறு மாயைப் புலிவாய்ப் பசுவுங்
கருமச் சூறைக் காற்றுறு சருகுந்
தருமிச் சுழலைச் சார்ந்திடு மெளியநின்
வருத்தங் குறித்து வருந்தே லுனக்குத்
திருத்தகு முணர்வு செப்ப வேண்டி
வந்தன முத்தி வழங்குது மென்று
னந்தநன் மொழிகேட் டன்பொடுந் துதிப்பேன்
கற்பக வனம்போற் கமழ்பூங் காவிற்
பொற்புற விளங்கும் பொலன்மணிக் கனகப்
பன்னக சாலையுட் பதுமபீ டிகைமேற்
றுன்னுபூந் தருக்கள் சூழ்கற் பகம்போற்
சங்கமீ ஞுப்பட் டயங்குவெண் மதிபோ
லங்கை கூப்பி யடியர்நின் றேத்த
வினிதெழுந் தருளி யென்முக நோக்கிப்
புனிதநீ ராடப் போகென மொழிந்தா
னீரிடை மூழ்கி நெடுங்கலை யணிந்து
சார்தலு மோமச் சடங்குக ளியற்றி
வெண்ணீ றணிந்து விதியெழுத் தஞ்சுந்
தெண்ணீர் மையினிற் செவியிற் புகட்டி
யறுகெரு வுடன்கை யள்ளிநீ ருடனென்
மறுகுட லாவி வான்பொருள் கொண்டான்

# திருச்செந்தூரகவல்.

பரவுசஞ் சிதநம் பார்வையா லொழிந்த
விரவுமுற் பவங்கள் வினையுடம் பளவி
லத்த னருண்மே லாகா மியங்கள்
பற்றில நினது பண்புபோ லிருந்த
நம்பெரு வடிவை நாடுகென் றருளித்
தம்பொற் கரமல ரென்றலை தீண்டி
முழுநிலம் புரப்ப முடிசூட் டுவபோற்
செழுமணிப் பதமென் சிரமிசைப் பொருத்திப்
பாத தீர்த்தம் பரிகல சேட
மாதரக் குழவிக் கன்னைபோ லருத்திக்
குருபதம் பணிதல் குஞ்சர முகனைக்
கருதல் சங்கற்பங் கங்கையின் பூசை
திருந்துமுத் திரைக டிக்குபந் தனநீ
டருந்துயர் நீக்கு மத்திர சந்தி
தத்துவத் திரயந் தாளத் திரயஞ்
சுத்தா சமனந் தொடுமிடந் தொடுகை
கரமுட னங்கங் கருதிடு நியாசம்
விரவு தருப்பணம் விளங்குநீ றணிகை
யஞ்செழுத் தோதி யாதவற் பணிதல்
விஞ்சுமா கமத்து விதிமுறை முடித்துப்
பண்டையோர் நம்மைப் பரவுசொற் பாடல்
கொண்டுநீ துதிகள் கூறென விளம்பிப்
பத்திகூர் விரதம் பயின்றிடி னுலாஞ்
சத்திநி பாதந் தருமெனப் பகர்ந்தா
னன்னமிட் டெவர்க்கு மரும்பசி தீர்த்துப்
பன்னருஞ் சாலை படித்துறைத் தடாகம்
வந்தா ரருந்தும் வாசநீர்ப் பந்தர்
நந்தா வனங்க ணலம்பெற வமைத்தே

## திருச்செந்தூரகவல்.

யீங்கிவை முதலா வெண்ணுன் கறமுந்
தீங்கிலா வண்ணஞ் செய்கென மொழிந்தான்
காலையி லெழுந்து கடிமலர் பறித்து
மாலிகை தொடுத்து மதிமுடிக் கடவுட்
பூசனைக் குதவிப் புனிதவா லயத்தின்
வாசல் விளக்கிட் டலகொடு மெழுக்கிட்
டாறுகா லமுஞ்சென் றரன்பத மிறைஞ்சி
யேறுளா னடியார்க் கேவல்பூண் டொழுக
லித்திற முதலா வியற்றுதல் சரியை
சுத்தசா லோக்கியந் துய்க்குமென் றிசைத்தான்
பொய்வகை நீக்கிப் பூத முதலா
வைவகைச் சுத்தி மெய்வகை விளக்கி
மணம்பொலி கந்த வர்க்கமா மலர்க
ளிணங்குநற் றூப மெழில்குலாந் தீபந்
தருநை வேத்தியந் தாம்பூல முதலாய்
வருமுப சார வகைபல வியற்றி
யகந்தவி ருளத்தோ டகம்புற மிறைஞ்சிச்
சுகங்கிள ரங்கித் தொடுகடன் முடித்துப்
போற்றுறு மிலிங்க பூசனைக் கிரியை
சாற்றுசா மீப்பியந் தருமெனப் பகர்ந்தான்
கட்டளை கப்பணங் கட்டளை யிட்டுத்
தட்டுறு மலந்தீர் சாதன மொழிந்து
கடுங்கொலை வெறும்பொய் களவுகட் காமம்
படும்பெயர் பஞ்ச பாதகந் தீர்த்துக்
காமங் கோபங் கசடுறு முலோபந்
தீமன மோகஞ் சேர்மத மாற்சரிய
மீண்டிவை முதலா வெண்ணில் பாவம்
பூண்டன வொழியப் புந்திதந் தருளி

# திருச்செந்தூரகவல்.

மன்னுங்கீ ழரணி வருத்தமி லுணர்வாய்ப்
பின்னுமே லரணி பிரணவ மாகக்
கடையவே ஞானக் கனலெழு மென்றே
தடைபடாப் பாச தகனஞ் செய்தா
னருளெனுந் தலத்தி லறிந்துகான் மடக்கி
யிருளற விருக்கு மியற்கையும் விண்டான்
பன்னிரண் டங்குலம் பறிந்திடும் பிராணன்
பின்னதி னொன்றும் பிரிந்துபோ மதனா
லாயுளுங் குறைந்திட் டாக்கையுந் தளர்ந்து
சாயுமென் றுரைத்துச் சாகா திருக்க
நாடியோர் பத்து நாடிநா டிகள்புக்
கோடிய வாயு வொருபதுந் தேர்ந்து
சொன்னநா டிகளிற் சுழுமுனை நடுவா
மின்னதின் பக்கத் திடைபிங் கலையா
மக்கினி திங்க ளாதவன் கலைகள்
புக்கழுச் சாரும் போய்மீண் டியங்கு
மூலகுண் டலியா முரகமூச் செறிந்து
வாலது மேல்கீழ் மண்டல மிட்டுப்
படந்தனைச் சுருக்கிப் படுத்துறங் குவது
நடந்துமே னோக்கி ஞானவீ டளிக்கு
மண்டல மூன்று மருவுதூண் புகவக்
குண்டலி யெழுப்புங் கொள்கையீ தென்றுன்
முன்னதி ரேசக முப்பத் திரண்டு
பின்னது பூரகம் பேசுமீ ரெட்டுக்
கும்பக நாலோ டறுபதாக் கூறுந்
தம்பமாத் திரையின் றன்மையு முணர்த்தி
மூலமே முதலா முடிநடு வுச்சிப்
பாலள வினுநீள் படுதுளை நோக்கி

மூலாதா ரத்தின் மூச்சுழிச் சுடரை
மேலாதா ரத்தின் மெல்லெனத் தூண்டி
யிருவழிக் காலு மொருவழி நடத்திக்
கருவழி யடைத்துக் கமலமா றுருவிப்
பன்னிரண் டந்தம் பரிதியு மதியு
மன்னியொன் றான வண்ணமுந் தெரிந்து
கமடமைந் தடக்குங் கருத்தெனப் பொறியின்
மமதைக ளடக்கி மனோலய மாக்கி
மூலக் கனலான் முழுமதி யுருக்கிப்
பாலைப் பருகும் பண்புதந் தருளி
யிட்ட காமியமு மெண்ணெண் கலையு
மட்டமா சித்தியு மன்புறக் கொடுத்துப்
பன்னிரு பட்சியும் பறவா வண்ண
மென்னுளே நிறுத்து மியற்கையும் விண்டான்
மூலமே முதலா மூவிரு தலத்தின்
கோலமும் பூதக் குறிகளு மதன்பா
லைம்பதோ டொன்று மக்கர விதமும்
பொன்பொலி கமலப் பூவிரு மூன்றுந்
தாரக வெழுத்துஞ் சார்பெழுத் தஞ்சும்
வாரண முகவன் மலரோன் றிருமால்
வருத்தமி லுருத்திரன் மகேச்சுரன் சதாசிவ
னுருத்தெளிந் திடநம் முருவே யாகு
மாறு மாமுகத் தமர்ந்தது மிதுவே
வேறிலை யென்று மெய்ம்மொழி செப்பி
யிலங்குமா யிரத்தெட் டிதழ்த்தா மரைமேற்
றுலங்கிடு நடனச் சோதியுங் காட்டி
யிருபத் தோரா யிரத்தறு நூறாய்
மருவிநா டோறும் வளர்சுவா சத்தைச்

சங்கென வாங்கிச் சமனுறக் கும்பித்
தங்கென் றெழுப்பு மசபையு மருளிப்
பொருளரு ளான்மாப் பொருந்திடும் திரோதை
மருவிரு மலமாய் வயங்குமஞ் செழுத்திற்
றிரோதையு மலமுந் தீர்த்தத னிடத்தில்
வரோதய மான வாசியை நிறுவி
வளம்பொலி சிவாய வாசியென் றுளத்தில்
விளம்புக நின்னை விளக்கு மானந்த
முத்தியஞ் செழுத்து மொழிந்தன மிதனைச்
சித்தசாந் தியினிற் செப்பென மொழிந்தான்
வாசிவா வென்ன வழங்குமூன் றெழுத்தும்
பேசுதன் முதிர்ந்த பேறென மொழிந்தா
னின்பமாம் வாசி யென்னுமீ ரெழுத்தி
லன்புறு மகிமை யதிசய மென்றான்
சீயெழுத் தொன்றே சிந்தையிற் கருதத்
தூயநற் சுடராய்த் தோன்றுவை யென்றான்
விந்துவு நாதமு மேவிய வெளியிற்
சிந்தையை நிறுவிச் சிவன்வடி வாகித்
தாக்குவை மூல நோக்குவை யதீதம்
போக்குவை பிறவி யாக்குவை யின்பெனத
தராப்புகு நாப்போற் சமனுற நிற்கு
மிராப்பக லற்ற விடத்தே யிருத்தி
நலம்படர் சோதி நடனகுஞ் சிதத்தாட்
சிலம்பொலி கேட்குந் திறம்பா லித்தான்
மயற்பொறி புலன்வாய் மனம்புகு நனவி
லியற்றிடு தவங்க ளியமநிட் டையதாஞ்
சார்பொறி விடுத்த சாக்கிரக் கனவு
சேர்தரு கருத்தாற் செய்தவ நியம

நீங்காக் கரண நீங்கவே நனவிற்
றூங்காத் தூக்கச் சுழுத்தியா சனமா
மறிந்தொண் ணூறு மாறும்வே றாக்கிப்
பிறிந்துதற் கண்டு பிரமமே தானாய்ச்
சாதனம் விடுத்த சாக்கிர துரியம்
பேதமற் றிருக்கை பிராணா யாமஞ்
சான்றுசாக் கிரம்போய்த் தானிருந் தமையுந்
தோன்றிடா துலகைச் சுழற்றுங் கால்போற்
பறந்திடுங் காலாற் பரமறந் தளவிற்
பிறந்திடு மதீதம் பிரத்தியா காரம்
வானெனு மகண்ட வடிவுகண் டெங்குந்
தானென் றிருக்கை தாரணை யாகுங்
காட்சிக ளனைத்துங் கண்ணதாய் விளங்கி
யாட்சியி னமைந்த ததுவே தியானந்
தற்பதந் தொம்பதஞ் சார்ந்திடு முபாதி
கற்பனை தீரக் கண்டசி பதமாஞ்
சச்சிதா னந்த சமரச நிலைதேர்ந்
துற்றசிற் பதம்பெற் றுறங்குதல் சமாதி
மன்னிடு சாம மறையுப நிடதஞ்
சொன்னவாக் கியத்தின் றொகையிதே ஞான
யோகவெட் டங்க முண்மைநீ யுணர்தி
யேகசா ரூபபிய மிதுவென மொழிந்தான்
சரியை கிரியை தருக்கமா யோகஞ்
சுருதியின் முறையே தொடங்கிய வனைத்து
நானெனும் போத நாட்டமே யன்றி
யீனமி லுணர்வுக் கின்பங் காணே
னென்றுநான் வினவி யிறைஞ்சலு நகைத்து
நன்றென மொழிவான் ஞான முறைக்கிற்

பாச ஞானம் பகர்பசு ஞான
மீ[illegible] [illegible]ன்னமூன் றுளவா
மதுமே[illegible] [illegible]பாச மாவ தாணவ
மதிமயற் கன்ம மாயை யிரண்டுந்
தெருமரல் காட்டுங் கருமமுந் திரோதையு
மருவிடும் பஞ்ச மலங்கா ணிதனை
யாதெனை வுணரா தகமென விருக்கை
பாச ஞானப் பண்பது வாகுந்
தரும்பசு ஞானஞ் சாற்றுதுங் கேண்மின்
வரம்பவ மூட்டு மலமைந் தவற்றி
னுணவ மொன்று மகலா மையினாற்
காணு[illegible] [illegible]க[illegible]க் கருவிக ளோர்ந்து
தன்னை யுணர்ந்து தானே பிரம
மென்னக் கருதி யிருப்ப தாகும்
பதிஞா னத்தைப் பகருது மகங்கூர்
மதிஞா னத்தால் வரும்பவ மொழியா
தாகையா லருள்புக் காணவ மொழிந்திட்
டேகமா மின்பத் தெய்துவ தாகுந்
தத்துவ முழுதுஞ் சடமுனைக் காணு
சித்தைநீ நடத்தற் கிறைவனே வல்லை
யறிவனு மல்லை யறியா னல்லை
செறியருள் காட்டத் தேர்ந்துகாண் பவனீ
யாதுசார்ந் திடினும் யானது வென்னும்
போதநின் றுணர்வு புகன்றிடிற் சிறிதா
மறைத்திடு மூல மலத்தினாற் பாசச்
சிறைக்குளே கிடந்து தேகநா னென்று
வல்வினை புரிந்து மயங்கினை யந்தத்
தொல்வினைப் பயன்கள் சூட்டின மிப்பா

விருவினை யொப்பு மலபரி பாகந்
திருவருள் பதிக்கத் தேடிவந் தனம்யா
மேவொரு மலத்து விஞ்ஞா ஞகலர்க்
கோவறு முத்தி யுணர்வினின் றளிப்போம்
பெருகிரு மலங்கொள் பிரளயா கலர்க்கு
மருவுநன் மூர்த்தி வடிவுகொண் டருள்வோ
மும்மல முடைய சகலனீ மொழியி
னம்மல நீக்கி யாட்கொண் டருள
மானைக் காட்டி மான்பிடிப் பவர்போன்
மானுட வடிவாய் வந்தனந் தெண்ணீர்
மீனது போல விழியுற நோக்கி
யானதோர் கமடம் போலகத் துன்னிப்
பறவை போலப் பரிசஞ் செய்து
திறமிகு முன்னூற் றெளிவுரை பகர்ந்து
பக்குவத் தடைவே பாலித் தருணீ
புக்கிட வேண்டிப் போந்ததென் றிசைத்தான்
பல்பல சமயப் பகுதிசேர் நிலையுஞ்
சொல்வகை மறப்புந் துகளற மொழிந்தான்
றெய்வஞ் சிவமே சிவனருள் சமயஞ்
சைவஞ் சிவத்தொடு சம்பந்த மென்றூன்
பூதம் பழித்துப் பொறியற வுணர்த்தி
வாதமாங் கரண வல்லப நீக்கிப்
பித்துறுங் கலாதிப் பிணக்கற விடுத்துச்
சுத்த தத்துவந் தாடண மாக்கி
முப்பது முப்பது முப்பதோ டாறெனச்
செப்புங் கருவிகள் சேரா தகற்றித்
துன்னிடு மத்துவா சோதனை கண்டு
தன்னை யுணர்ந்து தனித்திரு ணீக்கி

யாமா மூலக மனைத்தினுஞ் சாட்சி
நாமே யென்னு ஞானமுங் கடந்திட்
டண்ட பிண்டம் யாவுந் தோன்று
துண்டெனு முணர்வு மறக்கமும் விட்டு
விசுவக் கிராசம் வீறுப சாந்த
மசிபதங் குறிக்கு மாசையுந் தீர்த்துக்
கால்புகா விடத்திற் கறங்காத் தீபமு
மேல்விசை தீர்ந்து வீழ்ந்தபம் பரமுஞ்
சித்திர வடிவுந் திரைதீர் புனலு
மொத்தவந் நிலைசார்ந் தொளியரு ளோக்கி
யென்செய லேது மில்லையென் றெய்து
தன்செய லோக்கிச் சார்கென மொழிந்தான்
சும்மா விருக்கச் சொன்னதோர் வார்த்தை
யம்மா வதிசய மாருடன் புகல்வேன்
கரைசேர்த் தருள்வான் கருணையை நோக்கி
யிரைதேர் கொக்கொத் தேசற விருந்தே
னென்செய லகன்றேன் யானற வீசன்
றன்செய னடக்குந் தன்மையுங் கண்டே
னுத்து மிகத்தோ டடைதரு பௌதிகம்
போற்றுதெய் விகமிவை புரிவதுங் கண்டேன்
புலக்கணக் கதவு பூட்டினேன் சிந்தை
யலக்கண் டீர்ந்த வறிவையுங் கண்டேன்
பொறிபுலன் கரணம் பொருந்திடுங் கலாதி
யறிகரு விகள்போ யடங்கிடங் கண்டேன்
ருழுமென் னிழப்பிற் றயங்குறு விளக்கிற்
சூழுறு மொளிபோற் றுலங்குதல் கண்டேன்
பஞ்ச வருணப் படாம்விரித் ததுபோல்
விஞ்சுபல் சோதி விளங்கிடக் கண்டேன்

சித்திர படத்திற் சேர்பல வடிவ
மொத்த வனேக மொளிக்குளே கண்டேன்
பஞ்சமூர்த் திகளும் பஞ்சசத் திகளும்
விஞ்சைபோ லொளிக்குள் வெளிப்படக் கண்டேன்
மண்ணெடுங் கடம்போல் வரைமா திரங்க
ளெண்ணில் புவனமு மென்னுளே கண்டே
னெழுவகைத் தோற்றத் தியைந்தபல் லுயிரும்
வழுவறச் சோதி வானிடைக் கண்டேன்
றன்னுளே சகமுஞ் சகத்துளே யானும்
பின்னமற் றிருக்கும் பெற்றியுங் கண்டேன்
பளிங்கு போலப் படரொளி விந்து
விளங்குவெண் மதிபோல் வெளிப்படக் கண்டேன்
பரிதி போலப் படரொளி தோன்றி
யொருபது நாத மொலிக்கவுங் கண்டே
னக்கினி போலு மனந்தமீன் போலுந்
தக்கபே ரொளியாய்ச் சராசர மனைத்தும்
புரந்தரு ளகண்ட பூரண மாகிப்
பரந்தசெஞ் சுடரைப் பரையெனக் கண்டே
னருட்பரை யொளிக்கு ளழுந்துமந் நேர
முருக்கமுங் கண்ணீ ரொழுக்கமுந் திகைப்புங்
கம்பமும் புளகமுங் களிப்புட னகையுஞ்
சிம்புள்போல் வலியுஞ் சித்தியுங் கண்டேன்
மேலுள விஞ்சை விதிநெறி விடுத்த
பாலனுன் மத்தன் பக்குவங் கண்டே
னெங்கும் பரைக்கு ளுள்ளொளி யாகித்
தேங்குமா னந்தச் செழுஞ்சுடர் கண்டே
னுள்ளொளிக் குவமை யொன்றுங் காணேன்
விள்ளவுந் தரமோ மீமிசை விளங்கித்

தளிபடுஞ் சுடரைச் சிவமென் றுணர்ந்து
ளிபடு ஞானக் கண்ணினுற் கண்டேன்
பார்த்திடு மென்னைப் பசையற விழுங்க
வார்த்ததில் வீழ்ந்துற் றுணந்த மானேன்
றன்னைத் தந்தா னென்னைக் கவர்ந்தான்
ர்னைப் பெறுமோர் பேற்றையுங் காணேன்
ம்பிர காசஞ் சொரூபா னந்த
யம்புதற் கரிதா மின்பப் பெருக்கந்
ாடலை போலுங் காறலை போலுங்
ட்டலை யென்னுற் கூறவும் படுமோ
ழைப்பிடி யுண்டான் பெற்றி போலச்
சாய்படு கருவிச் சங்கமு நானும்
பகலோன் வெயிலிற் பாயிருள் விண்மீன்
நசமாய்க் கலந்த தன்மையும் பெற்றேன்
ாந்த மிருடபுங் கனல்படு மிரும்பும்
வெய்ந்தவிந் தனலும் வெங்கீ ருபபும்
தளிகைபோன் மதுரங் கொண்ட நாவென்ன
களிவிடா தென்னைத் தடுத்தாட் கொண்டான்
பிண்டேன் பிறப்பை வேதா கமதோ
சண்டை தீர்ந்து சமரச யானேன்
திருமலி செந்தூர்ச் சேவற் பெருமா
னிருமல ஞான திகழ்த்தியாட் கொண்ட
இவ்வண்ணந் தமியேற் கிருநிலப் பரப்பி
னவ்வவர்க் களிக்கு மருணெறி யுணரே
ஞைகப்பா லிந்த வருள்பெறல் வேண்டி
ஞெகயாற் றிருச்செந் தூரிடத் தேகிக்
குமரவேள் சரணங் குறித்துமா தவத்தீர்
மலமெய்ஞ் ஞான நீவிரும் பெறுவீ

ருத்தம ராவீ ருண்மையீ தென்று
சிற்றம் பலவன் செய்யுளாற் புகன்றன
கருத்துற வீதனைக் கற்போர் கேட்போர்
திருத்தகு மன்பாற் றினந்தொறுந் துதிப்போர்
பெறும்பல னிதனைப் பேசுதுங் கேண்மி
னுறும்பலன வேண்டி லுலகத் தோரே
பாவந் தீரும பார்பிகு தரும
மேவிளம பிறைபோன் மேனமேல் வளரு
துட்டதே வதைக டொட்டதும வஞ்ச
ரிட்ட பில்லி யிடாகளுந் தீரும
வாதம் பித்தம் வலிப்புங் காசஞ்
சீதம வெதுப்பு புகை தீரா நோய்கள்
வேதனை மிகுந்த வியாதிக ளெல்லா
மாதவற் கண்ட பனிபோ லகலுஞ்
சாகா வரமுந் தந்திடு முடம்பிற்
போகாப் பீடை போக்கி ரட்சிக்கும
வறுமை நீங்கும் வாழ்வுண் டாகுஞ்
செறிதரு பட்டா சித்திக ளெய்துஞ்
சரியை கிரியை சார்ந்திடு மியோகந்
தெரிதரு ஞானமுஞ் செறிதரும் வாழ்வே

திருச்செந்தூரகவல் முற்றிற்று.

---

யாழ்ப்பாணம்

## சுவாமிநாத பண்டிதரவர்கள்

## பதிப்பு நூல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| திருக்கோவையாருண்மை | 0 | 8 |
| சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு | 1 | 8 |
| திருவேரகத்தந்தாதி உரை | 0 | 2 |
| புட்பவிதி | 0 | 0 |
| சிவதத்துவவிவேகம் | 0 | 0 |
| திருக்கருவைவெண்பா வந்தாதி | 0 | 0 |
| ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரையுடன் | 0 | 1 |
| நித்தியகருமவிதி | 0 | 0 |
| சந்தானாசாரியர் புராண சங்கிரகம் | 0 | 1 |
| திருச்செந்திலந்தாதி உரை | 0 | 1 |
| முத்தகபஞ்ச விஞ்சதி | 0 | 1 |
| பட்டினத்தார் பாடற்றிரட்டு | 0 | 1 |
| நால்வர்நான்மணிமாலை முதலியன | 0 | 1 |
| விநாயக புராணம் உரையுடன் 1820 பாட்டு | 2 | 8 |
| கந்தபுராணம் மகேந்திரகாண்டம் உரை | 2 | 8 |
| உபதேசகாண்டம் 27 சருக்கங்கள் உரை | 3 | 0 |
| திருச்சுழியற் புராணம் | 0 | 12 |

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
6, பவளக்காரத் தெரு, சென்னை.